# 36 லட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் 12.37 லட்சம் கோடி முதலீடுகளுக்கான 1,179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

## நிதி நிலை அறிக்கை... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

178.மாநிலங்களுக்கிடையிலான கிடைமட்டப் பகிர்வில், மீண்டும் ஒருமுறை தமிழ்நாட்டிற்கு உரிய நியாயமான பங்கு வழங்கப்படாமல் நிதிக் குழு பாரபட்சமாக நடந்துகொண்டுள்ளது. ஒன்பதாவது நிதிக்குழு காலத்தில், தமிழ்நாட்டிற்கான பங்கு 7.931 சதவீதமாக இருந்த நிலையில், தொடர்ந்து வந்த நிதிக் குழுக்கள் அதனைக் குறைத்து வந்தன. இந்தப் பங்கு 4.079 சதவீதமாகக் குறைந்ததால் 3.17 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது, தமிழ்நாடு அரசின் நிலுவைக் கடனில் சுமார் 33 சதவீதத்திற்குச் சமமானதாகும். பதினாறாவது நிதிக்குழு பரிந்துரைகளில், நமது அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கு முறையே 23.74 மற்றும் 13.27 சதவீத அளவில் உயர்வு வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டிற்கு வெறும் 0.44 சதவீதம் என்ற மிகச் சிறிய உயர்வே வழங்கப்பட்டுள்ளது; இது, ஒப்பிடத்தக்க மாநிலங்களுள் மிகவும் குறைவானதாகும். நாம் பெருந்தன்மையை எதிர்பார்க்கவில்லை: சமநிலையினை உறுதி செய்திடும் நியாயத்தை மட்டுமே கோரியிருந்தோம் என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்திட விரும்புகிறேன். பதினாறாவது நிதிக் குழுவும் அந்த வகையில் தனது கடமையில் இருந்து தவறியுள்ளது.

**பகுதிஆ**


**மாநில அரசின் நிதிநிலை**

**சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே.**

179. இதுவரை இந்த அரசின் முக்கிய திட்டங்களை எடுத்துரைத்துள்ள நான், தற்போது மாநிலத்தின் ஒட்டுமொத்த நிதிநிலைமையை விளக்க விழைகிறேன்.

180. ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பில், ஒன்றிய அரசு மாநில அரசுகளை நியாயமற்ற முறையில் நடத்திய பல நிகழ்வுகள் கடந்த காலங்களில் கண்டுள்ளோம். எனினும், இந்த அரசு எதிர்கொண்டுவரும் சவால்கள் முன்னெப்போதும் தமிழ்நாடு சந்தித்திராத ஒன்று என நான் உறுதியாக கூறுவேன். தமிழ்நாட்டிற்கு பெரிய உட்கட்டமைப்புத் திட்டங்களை மறுப்பது, ஒன்றிய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான நிதியை விடுவிக்காமல் நிறுத்திவைப்பது. மாநிலங்களுடன் உரிய ஆலோசனைமேற்கொள்ளாமல்வரி விகிதங்களைச் சீரமைப்பதுஅல்லதுநியாயமற்றநிபந்தனைகளுடன் கூடிய திட்டச் என செலவினங்களை மேற்கொள்ள கட்டாயப்படுத்துதல் என ஒவ்வொரு வழியிலும் தமிழ்நாட்டின் நிதிநிலையில் செயற்கையான நெருக்கடியை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு மேற்கொண்டுவருவது தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.

181. நடப்பு நிதியாண்டில், அரசு எதிர்கொண்டு வரும் சவால்களில் சிலவற்றை இங்கு நான் பட்டியலிட விரும்புகிறேன்.




(i) பல்வேறு மாநிலங்களின் ஆட்சேபணைகள் மற்றும் எதிர்ப்புகளுக்கு கருத்தில் கொள்ளாமல், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்களை சீரமைப்பதற்கு, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமைப்பு ஒப்புதல் அளித்தது. இதனால், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டு நடைமுறை முடிவடைந்ததால் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கிடையில், இந்த வரி விகித மாற்றங்கள் மாநிலங்களின் நிதி நிலையில் மேலும் குறிப்பிட த்தக்க அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தும். நடப்பு ஆண்டில் மட்டும் 9,600 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வருவாயிலிருந்து முன்னறிவிப்போ அல்லது மாநில அரசுடன் கலந்தாலோசனை இன்றி, பெரும் தொகையான 1709 கோடி ரூபாயை இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ள மாநில அரசின் கணக்கில் இருந்து ஒன்றிய அரசு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிடித்தம் செய்தது. இதனால், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பின் கீழ் வருவாய்க் குறைவு ஏற்பட்டுள்ளதால், நடப்பு நிதியாண்டில் மாநிலத்தின் நிதி நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

(iii) 202526 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் வரவு செலவுத் திட்டத்தில், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒன்றிய வரிகளில் பங்கு, திருத்த மதிப்பீடுகளில் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, நடப்பு ஆண்டில் தமிழ்நாடு அரசுக்கு எதிர்பாராத வகையில் 1202 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(iv) அரசியல் சாசனம் பிரிவு 293(3)ன் படி மாநில அரசுகள் தங்களுக்குரிய கடனைத் திரட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கான அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஒன்றிய அரசானது, நிலுவையிலுள்ள உத்திரவாதங்களில் 5 சதவீதத்தை உத்திரவாத மீட்பு நிதியத்திற்கு மாற்றவேண்டும் என முன்னறிவிப்பின்றி விதித்துள்ள நிபந்தனையால், அரசிற்கு 3,087 கோடி ரூபாய் எதிர்பாராத மற்றும் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது.

(V) அதேபோன்று, அரசியல் சாசனப் பிரிவு 293ன் படி தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகத்திற்கு 16,290 கோடி ரூபாய் இழப்பீட்டு நிதி வழங்க வேண்டும் என ஒன்றிய அரசு நிபந்தனை விதித்துள்ளது. அவ்வாறு வழங்க இயலாத நிலையில், மாநில அரசிற்கு அனுமதிக்கப்படும் கடன் உச்சவரம்பிலிருந்து அத்தொகை கழிக்கப்படும் எனவும் ஒன்றிய அரசு நிபந்தனை விதித்துள்ளது. தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகத்திற்கு 413 கோடி ரூபாய் மட்டுமே உள்ளபடியான இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில், ஒன்றிய அரசின் நிபந்தனை. நடப்பு ஆண்டில் மாநில அரசிற்கு 15,877 கோடி ரூபாய் கூடுதல் செலவை ஏற்படுத்தியுள்ளது.

(vi) மாநில அரசுகளின் செலவினங்கள் ஒருபுறம் உயர்ந்து வரும் நிலையில், ஒன்றிய அரசு பொறுப்பேற்றுள்ள திட்டங்களுக்கு மாநில அரசுக்கு உரிய நிதியை விடுவிக்காமல் ஒன்றிய அரசு நிறுத்திவைத்துள்ளது. ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்திற்கான மானியங்கள் 3,548 கோடி ரூபாய், ஜல் ஜீவன் இயக்கத்திற்கு 3,112 கோடி ரூபாய் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒன்றிய நிதிக் குழு பரிந்துரைப்படி விடுவிக்கப்பட வேண்டிய மானியங்கள் 2,246 கோடி ரூபாய் ஆகியவை ஒன்றிய அரசு இவ்வாறு நிறுத்தி வைத்துள்ளவற்றில் உள்ளடங்கும்.

(vii) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான செலவினத்தை ஒன்றிய அரசும் மாநில அரசும் 50:50 என மேற்கொள்வதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்திருந்தாலும், அதன்படி மாநில அரசிற்கு கிடைக்கப் பெற வேண்டிய பலன்கள் இன்றளவும் முழுமையாக கிடைக்கப்பெறவில்லை. இதன் காரணமாக, மாநில அரசின் சொந்த நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒன்றிய அரசின் பங்கான சுமார் 9,500 கோடி ரூபாய், மாநில அரசின் மொத்த நிலுவைக்கடன்களின் ஒரு பகுதியாகவே தொடர்ந்து வருகிறது. இதனால், மாநிலத்தின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் உயர்ந்து காணப்படுவது மட்டுமல்லாமல், மாநிலத்திற்கு உரிய கடன் திரட்டும் திறனையும் பாதித்துள்ளது. இதனால், மாநில அரசின் பணப்புழக்கமும் பாதிக்கப்பட்டுள்ளது. பல முறை நினைவூட்டப்பட்ட போதிலும், தமிழ்நாடுஅரசின் கோரிக்கையை செவிமடுத்து. இதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ளத் தவறியுள்ளது.

182. நடப்பு நிதியாண்டில் மாநில அரசு எதிர்கொண்டு வரும் இத்தகைய சவால்களால், ஒன்றிய அரசு மாநில அரசின் நிதிநிலையில் ஏற்படுத்தியுள்ள அழுத்தமானது, மாநிலத்தின் நிதிநிலையில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சவால்களுக்கு இடையிலும், முதலமைச்சர் அவர்கள் தமது அயராத முயற்சிகள் மற்றும் அயராத அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம், தமிழ்நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறு வதை உறுதி செய்துள்ளார்கள்.

183. இத்தகைய சூழ்நிலையில், 202526 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள் மற்றும் 2026 27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை நான் இப்போது முன்வைக்க விழைகிறேன்.

184. 2025 26 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 220,895 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் சொந்த வரி வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 2,06,540 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. பொருட்கள் மற்றும் சேவைகள் வரி வருவாய் குறைந்துள்ளதே இந்த மதிப்பீடு குறைந்ததற்கு முக்கிய காரணமாகும். 202627 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2,29,579 கோடி ரூபாயாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது. வணிகவரிகளின் கீழ் 1,62,417 கோடி ரூபாய், முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் 31881 கோடி ரூபாய், வாகனங்கள் மீதான வரிகளின் கீழ் 14,928 கோடி ரூபாய் மற்றும் மாநில ஆயத்தீர்வையின் கீழ் 13,668 கோடி ரூபாய் வரி வருவாய் மதிப்பீடுகளை உள்ளடக்கியதாகும். சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்கள் சீரமைக்க ப்பட்டதால் ஏற்பட்டுள்ள எதிர்மறை விளைவு. பொருளாதார நடவடிக்கைகளில் முன்னேற்றம், மற்றும் வரி வசூல் திறனில் முன்னேற்றம் காணப்படும் என்றும் எதிர்பார்ப்பு ஆகிய பல்வேறு காரணிகளை கருத்திற்கொண்டு, மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2026-.27 ஆம் ஆண்டில் 11.15 சதவீதமாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

185. 2025 26 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 28,819 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 26,265 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2026-.27 ஆம் ஆண்டின் இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் 27,704 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, 202627 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வருவாய் மதிப்பீடான 2,57,283 கோடி ரூபாய், மொத்த வருவாய் வரவுகளில் 74.67 சதவீதத்தைக் கொண்டிருக்கும்.

186. 2025 26 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 23,834 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள். திருத்த மதிப்பீடுகளில் 20,073 கோடி ரூபாயாக கணிசமான அளவிற்கு குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் முழு பங்குத்தொகையை ஒன்றிய அரசு வரும் நிதியாண்டில் விடுவிக்கும் என எதிர்பார்த்து, ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெறக்கூடிய உதவி மானியங்கள் 2026 27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 24,762 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

187. 2025 26 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 58,022 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட ஒன்றிய வரிகளில் பங்கு, திருத்த மதிப்பீடுகளில் 56,819 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் வரவுசெலவுத் திட்டத்தின் அடிப்படையில், 202627 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒன்றிய வரிகளில் பங்கானது 62,531 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

188. மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெறக்கூடிய தொகைகளின் விகிதம், கடந்த சில ஆண்டுகளில் தொடர்ச்சியாகவும் மிக அதிக அளவிலும் வீழ்ச்சியடைந்து வரும் வேளையில், 201617 ஆம் ஆண்டில் 3.41 சதவீதத்திலிருந்து. 202526 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் 2.16 சதவீதமாக கணிசமாகக் குறைந்துள்ளது. தற்போதைய மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில், இந்த 1.25 சதவீதம் குறைவினால் மாநில அரசிற்கு ஏற்படக்கூடிய 44,598 கோடி ரூபாய் இழப்பானது, 202526 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறையில் ஏறத்தாழ 41 சதவீதத்திற்கு சமமாகும்.

189. சுருக்கமாக,. 2025 26 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3,31,569 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவினங்கள், திருத்த மதிப்பீடுகளில் 3,09,698 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2026 27 ஆம் ஆண்டில் மொத்த வருவாய் வரவினங்கள் 3,44,575 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, திருத்த மதிப்பீடுகளைவிட 11.26 சதவீதம் அதிகமாகும்.

190. செலவினங்களைப் பொறுத்தவரை, 2025 26 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3,73,204 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் செலவினங்கள், திருத்த மதிப்பீடுகளில் 3.78,917 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஒன்றிய அரசு நிபந்தனையின்படி, தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகத்திற்கான உயர்த்தப்பட்ட இழப்பீட்டு நிதி வழங்க 15,877 கோடி ரூபாய், உத்திரவாத மீட்பு நிதியத்திற்கு தொகை மாற்றம் செய்ய 3,087 கோடி ரூபாய் உள்ளிட்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. குடும்ப த்திற்கு 3,000 ரூபாய் வீதம் பொங்கல் பரிசு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கு ஒருமுறை சிறப்பு நிதியுதவியாக 5,000 ரூபாயை பிப்ரவரி மாதத்தில் வழங்கியது என ஒட்டுமொத்தமாக இந்த அரசு 10,849 கோடி ரூபாய் கூடுதலாக செலவிட்டுள்ளது. இவ்வாறான கூடுதல் செலவினங்கள் ஏற்பட்டுள்ளபோதும். வளர்ச்சி சாராத செலவினங்களில் ஏற்படக்கூடிய சேமிப்பின் காரணமாக, ஒட்டுமொத்த செலவினங்களின் உயர்வு 5,713 கோடி ரூபாயாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 202627 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்த வருவாய் செலவினங்கள் 3,93,272 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 202526 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளைவிட 3.79 சதவீதம் வளர்ச்சி கொண்டதாகும்.

191. 2025 26 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 57,231 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மூலதனப் பணிகளுக்கான செலவினங்கள், திருத்த மதிப்பீடுகளில் 51,443 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மூலதனச் செலவினம் எதிர்பார்த்ததை விட குறைந்துள்ள போதிலும், சென்ற ஆண்டை விட 9.20 சதவீதம் அதிகரித்துள்ளது. 2026 27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 59,562 கோடி ரூபாயாக மூலதனப் பணிகளுக்கான செலவினங்கள் மதிப்பிடப்பட்டுள்ளது. இது, திருத்த மதிப்பீடுகளைவிட 15.78 சதவீதம் வளர்ச்சி கொண்டதாகும். 202627 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில், நிகரக் கடன் உட்பட மூலதனச் செலவினங்கள் 73,270 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.




192. இதுவரை தெரிவித்து வந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்கள் சீரமைப்பு, ஒன்றிய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான நிதி நிறுத்திவைக்கப்பட்டது. ஒன்றிய அரசு நிபந்தனையின்படி தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகத்திற்கான உயர்த்தப்பட்ட இழப்பீட்டு நிதி வழங்குதல். உத்திரவாத மீட்பு நிதியத்திற்கு தொகை மாற்றம் செய்தல் போன்ற காரணங்களால், 202526 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 41,635 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீடுகளில் 69,219 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட, இந்த நிதி நெருக்கடிகள் மட்டும் இல்லையெனில், இந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கிணங்க நடப்பு நிதியாண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். 2026 27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய்ப் பற்றாக்குறை 48,696 கோடி ரூபாயாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

193. 2025 26 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,06,963 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீடுகளில் 1,24,007 கோடி ரூபாயாக உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னதாக குறிப்பிட்டவாறு, ஒன்றிய அரசு மாநில அரசிற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கியிருந்தால், நடப்பு நிதியாண்டின் நிதிநிலையின் அளவும் மேம்பட்டுக் காணப்பட்டிருக்கும். 2026 27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதிப் பற்றாக்குறை 1,21,949 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2025 26 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 3.00 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீடுகளில் 3.48 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2026 27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3.00 சதவீதமாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதிநிலைக்கு விடுக்கப்பட்ட பல்வேறு சவால்களுக்கு இடையிலும், நிதிநிலையை மேம்படுத்துவதில் அரசிற்கு உள்ள உறுதிப்பாட்டை வெளிக்காட்டுகிறது. மாநிலத்தின் நிதி நிலைக்கு, வெளியிலிருந்து வேறு ஏதும் காரணிகளால் புதிய சவால்கள் ஏற்படாத நிலையில், இந்த இலக்குகள் அரசு எட்டக்கூடிய ஒன்று தான்.

194. 2025 26 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 9,29,959 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் ஒட்டுமொத்த நிலுவைக் கடன், 2025 26 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 9,52,374 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு, ஒன்றிய அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதால், ஒன்றிய அரசின் கணக்குகளில் இடம்பெற வேண்டிய 9,52,265 கோடி ரூபாயும் இதில் உள்ளடங்கும். பல்வேறு தருணங்களில் ஒன்றிய அரசிற்கு மாநில அரசு கோரிக்கை விடுத்த போதிலும், இதற்கான புத்தகவழி சரிசெய்தல் வழியே நடைபெறவேண்டிய கணக்கு நடைமுறையை ஒன்றிய அரசு மேற்கொள்ளாமல் உள்ளது. இதனால், மாநில அரசின் கடன் செயற்கையாக அதிகரித்துக் காணப்படுகிறது. இத்தொகை நீங்கலாக, திருத்த மதிப்பீடுகளில் நிலுவையில் உள்ள கடன் 9,42,851 கோடி ரூபாயாகவும், 2026 27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10,62,248 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

195. 2024 25 ஆம் ஆண்டின் கணக்குகளின்படி, 26.39 சதவீதமாக இருந்த, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான கடன் நீங்கலான மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் ஒட்டுமொத்தக் கடன் விகிதமானது, 2025 26 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 26.43 சதவீதமாக சற்றே அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2026 27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் 26.12 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**பேரவைத் தலைவர் அவர்களே.**

196. எனினும், **மாற்றாந்தாய் மனப்பான்மையோடு ஒன்றிய அரசு வழங்க மறுக்கும் நிதி, அனுமதி மறுக்கப்படும் நலத் திட்டங்கள் என பல தடைகளைத் தாண்டியும், தமிழ்நாடு சாதனைகள் பல புரிந்து வருவதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். குறிப்பாக, ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டில் நாட்டில் உள்ள முன்னணி மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்வது மட்டுமின்றி**, மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் மோட்டார் வாகனங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாடு, புத்தொழில் சூழல் அமைவுக்கான தரவரிசையில் முன்னணி மாநிலமாக விளங்குவதோடு, தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிரின் பங்கேற்பு நாட்டிலேயே முதன்மை எனும் சிறப்பையும் பெற்றுள்ளது. உயர்கல்விச் சேர்க்கை விகிதத்தில் நாட்டில் முதலிடம் என்பது மட்டுமல்ல. தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பின் கீழ், இந்திய அளவில் உள்ள முதல் 100 உயர்கல்வி நிறுவனங்களில், 17 நிறுவனங்களுடன் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 20 சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட ஈர நிலங்கள் (Ramsar sites) உள்ளதன் மூலம், இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான ராம்சர் தளங்களைக் கொண்டுள்ள தனித்துவமான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மேலும், நிதி ஆயோக்கின் (NITI Aayog) நீடித்த வளர்ச்சி இலக்கு குறியீடு, 2023 24 ல் கால நிலை செயல்பாட்டில் தமிழ்நாடு முதல் இடம் பெற்றுள்ளது. மேலும், வறுமைக் குறியீடு களில் தமிழ்நாடு 1.43 சதவீதத்துடன் தேசிய அளவில் குறைவான வறுமைநிலை கொண்ட மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது.

**197. இவ்வாறு, நாட்டின் பிற மாநிலங்கள் மட்டுமின்றி, உலக நாடுகளுடனும் போட்டியிடும் அளவிற்கு இன்று தமிழ்நாடு உயர்ந்து இருக்கிறது என்றால் அதற்கு உரிய அடித்தளத்தை அமைத்துத் தந்து இம்மாமன்றத்தில் ஓவியமாக நம் முன் நிறைந்து நிற்கும் தலைவர்கள் அனைவருக்கும் இம்மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றி நவில விரும்புகிறேன். இந்த மாபெரும் தலைவர்களின் வழியில் தற்போது நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்”**

**(புறம்186)**

**மக்கள் உயிர்வாழத் தேவையான உணவும், நீரும் மட்டுமே உலகிற்கு உயிராகாது. முறை செய்து காத்திடும் தலைவனே மக்களின் வாழ்வாதாரத்திற்கு உண்மையான உயிர் எனும் மோசிகீரனார் கூற்றுடன், புறநானூறு காட்டிய வழியில் நாடே போற்றும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கரங்களைப் பற்றி தமிழ்நாட்டு மக்கள் தன்னம்பிக்கையோடு ஒன்றாக வென்றெடுத்திடும் நோக்கோடு வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருகின்றனர்.**

198. இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு அயராது உழைத்த நிதித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் அவர்களுக்கும் நிதித்துறையின் பிற அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

199. இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினைச் செதுக்கிடத் தேவையான பல ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் எனது மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

200. பேரவைத் தலைவர் அவர்களே, 2026 27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!

வெல்க தமிழ்நாடு!

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

**நா**டே போற்றும் இந்த மகத்தான திட்டத்தின் பலன்கள் எதிர்வரும் மாதங்களிலும் தடை இன்றி ஒரு கோடியே 31 இலட்சம் பயனாளிகளுக்கும் கிடைத்திடும் வகையில், அண்மையில், பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான உரிமைத் தொகை 3,000 ரூபாயும், கூடவே கோடைக் காலச் சிறப்புத் தொகுப்பாக 2,000 ரூபாயும் சேர்த்து, மொத்தம் ஐந்தாயிரம் ரூபாய் மகளிரின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட போது தமிழ்நாடே இன்ப அதிர்ச்சியில் உறைந்து போனது. கடந்த வெள்ளிக் கிழமையன்று, வைகறைப்பொழுதில், கதிரவன் உதித்துத் தன் பயணத்தைத் தொடங்கிய அதே வேளையில் ஆரம்பித்து, மூன்று மணி நேரத்திற்குள் ஒரு கோடியே 31 இலட்சம் மகளிரின் வங்கிக் கணக்கில் ஐந்தாயிரம் ரூபாய் உரிமைத் தொகை வரவு வைத்த போது இந்த நாடே திரும்பிப் பார்த்தது. மக்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர்.

# சென்னையில் 250க்கும் மேற்பட்ட ‘உலகளாவிய திறன் மையங்கள்!